1972 மார்ச் 27]

## சின்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கு பூரிப்பூதியம்

*730 வினு—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரசு சின்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்ற தொழிலாளர்களுக்கு கிடைப்பது போல் வருடாந்திர போனஸ் அளிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லே.

திருமதி த. ந. அனந்தநாயகி: தொழிலாளர்களுக்கெல்லாம் 8–1/3 சதவிகிதம் போனஸ் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசோடு போராடுகின்ற மாநில அரசு அரசுத்துறையின்கீழ் வேலே செய்யும் சின்கோனு தொழிலாளர்களுக்கு அளிப்பதற்கு மறுப்பதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: போனஸ் அளிப்பது அல்லது மறுப்பது என்ற பிரச்னே இல்லே. அரசுத்துறை தொழிலாளர் களுக்கும் போனஸ் வழங்குவதற்கு மொத்தமாக சட்டம் வந்தால், எல்லோருக்கும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன்: நீல மலேயிலிருந்து சிறிய தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து அரசுக்கு ஏதேனும் மனு கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானுல், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மனுக்கள் வந்திருக்கின்றன. சட்டத்தின் கீழ் அரசுத்துறை நிறுவனங்களிலுள்ள தொழிலாளர் களுக்கு போனஸ் கொடுக்கவேண்டிய முறை இல்லாத காரணத் தினுல் நடவடிக்கை இல்லேயே தவிர, மொத்தமாக அகில இந்திய ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்டு, சட்டம் வந்தால், நாமும் விரும்பி ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தற்பொழுது இருக்கிற சட்டம் அரசுத் துறையில் இருக்கிற தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதற்குத் தடையாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இப்பொழுது இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் டிரான்ஸ் போர்ட் இலாகாவில் உள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறதே? அதே முறையை செயல்படுத்தி சின்கோனு

ரப்பர் பிளாண்டேஷன் தொழிலாளர்களுக்கு மட்டும் கொடுக்கப் படாதது ஏன்? அது சம்பந்தமாக சட்டம் தடையாக இருந்தால், சட்டத்தைத் திருத்தியாவது இந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : டிரான்ஸ்போர்ட் இலாகாவில் எக்ஸ் கிரேஷியா பேமெண்டாக ஊக்க போனஸ் தான் அளிக்கப் பட்டு வருகிறது. 1,000 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் நிலையில் தேவைக்குத் தகுந்தாற்போல் இதை விஸ்தரித்துக்கொண்டு போகிறோம். அதனால் தொழிலாளர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மதிப்பீட்டுக்குழு அறிக்கையில் கூட சின்கோனா தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கவேண்டும் என்று ஒரு பரிந்துரை காணப்படுகிறது. அதன் மீது அரசு எடுத்துக்கொள்ள இருக்கும் நடவடிக்கை என்ன? மேலும், ரூ. 2½ கோடிக்கு அதிகமாக லாபம் சம்பாதிக்கும் இந்தத் துறையில் இந்தப் பூரிப்பு ஊதியத்தைக் கொடுக்கக் கூடாதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இரண்டரைக் கோடி ரூபாய்க்கு மேலாக லாபம் வந்ததாக தகவல் இல்லை. எஸ்டிமேட் கமிட்டி பரிந்துரை செய்திருக்கிறார்கள். 1967-க்குப் பின்னாலே தொழிலாளர்களுக்கு நான்கு முறை ஊதிய உயர்வு கொடுக்கப் பட்டிருக்கிறது.

*Nurseries*

*731 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government propose to develop nurseries for the extraction of perfumes in the State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (அ) செடிப் பண்ணைகளுக்கும் வாசனைப் பொருள்களுக்கும் நேரடித் தொடர்பு எதுவுமில்லை. ஏனெனில், வாசனைப் பொருட்கள் செடிப் பண்ணைகளிலிருந்து பெறப் படுவதில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.